1984 மார்ச் 29]

(ஆ) விரைவில் அத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா ?

(இ) அத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) மற்றும் (ஆ) சிவகாசி நகர் மற்றும் திருத்தங்கல் பேரூராட்சிகளுக்கான குடிநீர் திட்டத்திற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகக் கடன் உதவி பெற அரசு இடைக்கால (Adhoc) அனுமதி அளித்துள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அவை அரசின் ஒப்புதல் பெற்றவுடன் செயல்படுத்தப்படும்.

(இ) சிவகாசி நகரக் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தின் மதிப்பீடு ரூ. 454 லட்சம் எனவும் திருத்தங்கல் பேரூராட்சிக் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தின் மதிப்பீடு ரூ. 109.48 லட்சம் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

**திரு. வி. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, புதிதாகத் திட்டங்களை அறிவித்திருப்பதற்காக மாண்புமிகு அமைச்சரவர்களுக்கும், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவரவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஏற்கனவே, விருதுநகரில் ரெகுலர் டிவிஷன் இருக்கிறது. புதிதாக ஒரு டிவிஷனை அமைத்து இந்த வேலைகளைத் துவங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, புதிதாக டிவிஷன் அமைப்பது என்பதெல்லாம் பரிசீலனை செய்யப்பட வேண்டிய ஒன்று. அது அவ்வளவு சுலபமாக ஆகக் கூடியது அல்ல. ஆனால், இந்தக் காரியங்களை எவ்வளவு விரைவிலே செய்ய முடியுமோ அவ்வளவு விரைவிலே செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

**கடம்பூர் பேரூராட்சிக்குக் குடிநீர் வழங்க வேண்டி வந்துள்ள கோரிக்கை.**

501—(*வினா எண். 19266) **திரு. மு. அப்பாதுரை :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடம்பூர் பேரூராட்சிக்கு சீவலப்பேரி கோவில்பட்டிக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்க வேண்டும் என அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) ஆம்.

(ஆ) கோவில்பட்டி குடிநீர்த் திட்டத்திலிருந்து கடம்பூர் பேரூராட்சிக்குக் குடிநீர் விஸ்தரிப்பு செய்வதற்கான செயற்குறிப்பு தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. மு. அப்பாதுரை :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடம்பூர் பேரூராட்சிக்குக் குடிநீர் வழங்குவதற்கான செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது என்று அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். இந்தப் பரிசீலனை எப்பொழுது முடிவு பெற்று இந்தத் திட்டம் அமலுக்கு வரும்? எங்கள் மாவட்டம் வெள்ளத்தினால் பெரும் சேதாரங்களுக்கு உட்பட்டிருந்தாலும் கூட, கடம்பூர், கயத்தாறு போன்ற இடங்கள் இன்றைக்கும் நிரந்தரமாகக் குடிநீர்ப் பற்றாக்குறை இருக்கின்ற பகுதிகளாகும். அதுமட்டுமல்லாமல், பல்வேறு காலகட்டங்களில் போடப்பட்ட ஆழ்குழாய்க் கிணறுகள் பழுதடைந்து தண்ணீர் இல்லாமல் இருக்கிறது. அவைகளுக்குச் செலவு செய்யும் பணத்தை விரயம் செய்யாமல் இந்த நல்ல திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, இந்த ஆழ்குழாய்கள் பழுதடைந்து சில கிணறுகளில் வருகிற தண்ணீர் உப்பாகிவிட்டது. எனவே அந்தப் பகுதியில் குடிதண்ணீர் கொடுக்க வேண்டியது மிக அவசியம் என்று அரசாங்கம் கருதுகிறது. திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. திட்ட அறிக்கை தயாரித்த பின் கடம்பூர் பேரூராட்சியிடமிருந்து தீர்மானம் பெற்று அரசாங்கத்தின் அங்கீகாரத்திற்கான திட்ட அறிக்கை வாரியத்திடமிருந்து பெறப்பட்டு உரிய நடவடிக்கைகள் உரிய காலத்தில் விரைவில் எடுக்கப்படும்.

**திரு. மு. அப்பாதுரை :** தலைவர் அவர்களே, பேரூராட்சி தீர்மானத்தை நானும் துறைக்கு அனுப்பி வைத்திருக்கிறேன், தனி அதிகாரி மூலம். கடம்பூர், கயத்தாறு இரண்டும் இத்திட்டத்தின் கீழ் வரவேண்டும். இந்தத் திட்டத்தை மிகச் சீக்கிரமாக நிறைவேற்ற — அரசாங்கத்திடமிருந்து பைல்ஸ் வர கால அவகாசம் இல்லை — சமீபத்தில்கூட ஒரு தூதுக்குழு வந்து அமைச்சர் அவர்களையும் சந்தித்தார்கள். எனவே இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கைகள் எடுப்பார்களா ?

1984 மார்ச் 29]

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, தீர்மானத்தை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் எனக்கு நேராக அனுப்பினால் அதைப் பரிசீலனை செய்வதற்குச் சிரமம் ஏற்பட்டுவிடும். அந்தப் பேரூராட்சி மூலமே, ப்ராப்பர் சானல் வழி அனுப்ப வேண்டும். அதைப் பெற்று தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**ஈ. எஸ். ஐ. மருத்துவ வசதியைக் கட்டிடத் தொழிலாளர்களுக்கும் ஏற்படுத்தும் திட்டம்.**

502—(* வினா எண். 19762)—**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஈ.எஸ்.ஐ. மருத்துவ வசதியைக் கட்டிட நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தொழிலாளர்களுக்கும் ஏற்படுத்தித் தரும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, இல்லை. ஆனால் 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டட கட்டுமானப் பணியாளர்கள் (பணி நிலைமைகள்-பல்வகை விதித்துறைகள்) மசோதாவின் பிரிவு 40(8) இன்படி அரசு அறிக்கை ஒன்றை வெளியிடுவதன் மூலம் 1948 ஆம் ஆண்டு தொழிலாளர் அரசு காப்புறுதிச் சட்டம் (மத்திய சட்டம் 34/1948) கட்டட கட்டுமானப் பணியாளர்களுக்குப் பொருந்தச் செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.

**திரு. இரா. தாமரைக்கனி :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது 'இல்லை' என்று சொன்னார்கள். பிறகு வகை செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும் இந்த வகை எப்போது செய்யப்படும் ? அது எப்போது எந்த வகையில் முடியும் ? எந்த மாநிலத்திலாவது இந்த வகை இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, கேள்வி, 'ஈ.எஸ்.ஐ. மருத்துவ வசதியைக் கட்டட நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தொழிலாளர்களுக்கும் ஏற்படுத்தித் தரும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?' என்பதாகும். அப்படி இல்லை. ஆனால் இந்த அரசாங்கம் ஒரு சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்தியிருக்கிறது, கட்டட கட்டுமானத் தொழிலாளர்களுக்காக. அது இந்தச் சட்டமன்றத் தொடர் கூட்டத்தில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதில் இந்த ஈ.எஸ்.ஐ. வசதியை எக்ஸ்டென்ட் செய்வதற்கு வேண்டிய